[1970 மார்ச் 20

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : இம்மாதிரி சிட்டு பண்டு ஸ்தாபனங்கள் என்ற பெயரால் பொதுமக்களுடைய பணம் பாழடிக்கப்பட்டு மோசமான முறையில் பலர் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே, சரியான முறையில் சிட் பண்டு ஆக்டைக் கொண்டுவந்து, ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : 1961-ஆம் ஆண்டு சிட்பண்டு ஆக்ட் கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், சென்னை நகரம் ஆகிய இடங்களுக்குத்தான் இருந்தது. மற்ற இடங்களில் இந்தச் சட்டம் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் சிட்டுக் கம்பெனிகளின் பெயரால் ஏமாற்றப்பட்டிருப்பது தெரியவந்தது. அதற்குப் பிறகு இந்தச் சட்டத்தை தமிழ் நாடு முழுவதற்கும் இப்போது அமுல்படுத்தியிருக்கிறோம். இந்த ஆண்டில் மட்டும் 32 வழக்குகள் தொடரப்பட்டு, 28 வழக்குகளில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நான்கு வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இப்போது அநேக இடங்களில் சிட்பண்டு கம்பெனி இரண்டு, மூன்று மாதம் நடைபெறுகிறது. உடனே மக்களை மோசம் செய்துவிட்டுப்போய்விடுகிறார்கள். சிட் பண்டு சட்டம் நகரத்திற்கு மட்டும் தான் இருக்கிறது. மொஃபசல் பகுதிகளுக்கும் இதைக் கொண்டுவருவார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : நமது மாநிலம் முழுவதற்கும் அந்த சிட் பண்டு சட்டத்தை 1—12—1969 முதல் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். எங்கு தவறு நடந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM : Are the Government aware of the fact that in spite of the Act being in existence, there are many unofficial chits which do not possess licence? They do not register themselves. Are the Government aware that this is because there is a lacuna in the Act with the result the chit amount does not go to the one who bids highest in the bidding? Will the Government come forward to bring in a comprehensive legislation to avoid this lacuna in the Act?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இப்போதே என்ன என்ன குறைகள் இருக்கின்றனவோ அவற்றுக்கு இடமளிக்காத முறையில் விதிமுறைகள் இருக்கின்றன. சிட்டுபண்டு கம்பெனிகள் முன்கூட்டியே பணம் டெபாசிட் பண்ணவேண்டும் என்பது பொதுமக்கள் போடுகிற பணத்திற்கு உத்தாவாதம் அளிப்பதற்குத்தான். இதுபற்றி வேறு எந்தவிதமான புகாரும் இல்லை. இருந்தால் அதுபற்றி யோசிக்கலாம்.

சென்னை நகரில் வாழ்க்கைத்தரப்புள்ளி

*468 **வினா.—திரு. ஏ. எம். இராஜா** : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை நகரத்தில் வாழ்க்கைத் தரப்புள்ளி எண் குறைந்துள்ளதா?

(இ) ஆம் எனில், கடந்த ஆறு மாதங்களில் எவ்வளவு புள்ளி இறங்கி உள்ளது?

1970 மார்ச் 20]

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) சென்னை மாநகரில் தொழிலாளர் வகுப்பினருக்கான வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண் குறையவில்லை. ஆனால் சிறிது உயர்ந்துள்ளது. 1969-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 729-லிருந்து ஜுலை மாதத்தில் 730 ஆகவும், ஆகஸ்டு மாதத்தில் 737 ஆகவும் உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் 732-ஆக இறங்கி உள்ளது. அக்டோபர் மாதத்தில் 739 ஆகவும், நவம்பர் மாதத்தில் 747 ஆகவும் உயர்ந்துள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : A few days ago I had asked a question why the cost of living index had not been released for February which is normally due in the first week of March? May I know the reasons for the delay in the release of cost of living report? Is it because it has increased further by a few points? Why has it not been released in the first week of March? Will the Hon. Minister be able to tell us the reasons?

மமாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: எங்கள் துறை புள்ளிவிவரம் தான் தயாரிக்கிறது. அதை வெளியிடுவது நாங்கள் அல்ல. ஆகவே இம்மாதம் வெளிவராதது எங்கள் குற்றம் அல்ல. இதுபற்றி நாங்கள் எழுதிக்கேட்டிருக்கிறோம். ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கிற கணக்கை எடுத்துக்கொள்வதா கூடாதா என்பது பிரச்சினை. தொழிலதிபர்கள் அதைக் கணக்கிட வேண்டுமென்று கூறி இருந்தார்கள். அதுபற்றி எல்லாத்துறை அதிகாரிகளையும் கலந்துபேசியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஒரு முடிவுக்கு வர வேண்டியிருப்பதால்தான் காலதாமதமோ என்று நினைக்கிறேன். இதுபற்றி புள்ளிவிவர இயக்குநரிடம் கேட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்--விடைகள் முடிவடைந்தன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

3. அறிவிப்பு

கோவை மாவட்டத்தில் பேரவை உறுப்பினர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டது—குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 144-வது பிரிவின்கீழ் விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியதற்காக, இ.பி.கோ. 143, 186 ஆகிய பிரிவுகளின்கீழ் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இப்பேரவையின் உறுப்பினர்கள் திருவாளர்கள்

1. க. ர. நல்லசிவன்

2. பி. வேலுச்சாமி

3. டி. டி. எல். திப்பையா

4. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்.